

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# JAFFNA HINDU COLLEGE

# இந்துவின் வீச்சு இதழ் - 03

01.04.2020 தொடக்கம் 30.06.2020 வரை



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிவஞான கோவிலில் உள்ள பரிவார மூர்த்திவிநாயகர்**

**அதிபரின் உள்ளத்திலிருந்து...**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளின் வீச்சின் தொடர்ச்சியாக 2020 ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிதழ் வெளிவருவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்துவின் வரலாற்றில் ஒரு தொற்று நோயின் இடர்காலத்தை எதிர் கொண்ட பதிவுகளை இவ்விதழ் தாங்கி நிற்கிறது. அதாவது உலகம் முழுவதும் பரவிய பெருந்தொற்று கொரொனா (கொவிட் 19) காரணமாக முழு உலகமுமே முடங்கு நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நிலையில் எமது நாட்டு மக்களும் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்கான வேலைகளை இழந்து தமது வருமானத்தை இழந்து வாழ்வில் பெருந்துயரத்தை அனுபவித்தனர்.

இந்நிலையில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன, கல்விச் செயற்பாடுகள் நடைபெறவில்லை, பரீட்சைகள் நடைபெறவில்லை மாணவர்கள் வெளியே வந்தால் தொற்று ஏற்படும் என்ற நிலையில் அவர்களை வீடுகளிற்கு வெளியே வர அரசு அனுமதிக்கவில்லை. இத்தகைய கடினமான சூழ்நிலையில் வறிய மாணவர்கள் தமது அன்றாட உணவு நெருக்கடிக்கு, வாழ்வியல் நெருக்கடிக்கு, பெரும் உளநெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர், கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க எந்த வழியும் இருக்கவில்லை. இத்தகைய சூழல் தொடர்ந்தால் ஒரு சந்ததியே பாதிப்புற்று விடும் என்ற நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிர்வாகத் தலைமை இந் நெருக்கடியை எதிர்கொள்வது தொடர்பில் பின்வரும் திட்டங்களை வகுத்துச் செயற்பட்டது.

**அதன் பிரகாரம் பின்வரும் பிரதான முடிவுகள் எடுக்கப்பட்டன**

1. வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை அவர் தம் வீடுகளுக்கே சென்று வழங்குவது,
2. நிகழ்நிலையில் (online) மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பது.
3. நிகழ்நிலைக் கற்பித்தலுக்கு ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்குவது பாடசாலைக்கு நிகழ்நிலைக் கற்றலுக்கான வளங்கள் மற்றும் தொழிநுட்பங்களைப் பெற்றுக்கொடுப்பது.
4. நிகழ்நிலைக் கற்றலில் ஈடுபட வசதியற்ற மாணவர்களுக்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொடுப்பது.
5. எமது கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி அனைத்துத் தமிழ் மாணவர்களும் பயன்பெறும் வண்ணம் ஒளிப்பதிவுகளை மேற்கொண்டு கல்வித் தொலைக்காட்சிகளினூடாகவும் இணைய தளங்களினூடாகவும் (You Tube) ஒளிபரப்புவது.

மேற்படி விடயங்கள் எமது ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான செயலூக்கத்துடனான செயற்பாட்டின் மூலம் நேர்த்தியாக நடைமுறைப்படுத்தப்பட்டதனால் இடர்காலம் வெற்றி கொள்ளப்பட்டது என்பதை இவ்வீச்சில் நான் பதிவு செய்வதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகிறேன். மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு பொருளாதாரமும் நெருக்கடி நிலையும் தடையாக இருக்கக் கூடாது என்பதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உறுதியாக இருக்கின்றது.

திரு.இரட்ணம் செந்தில்மாறன்.

அதிபர்.


**போசகர்:**

திரு.இரட்ணம் செந்தில்மாறன்
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பொறுப்பாசிரியர்கள்**

திரு.சி.பரணீதரன்
(உப அதிபர்)

திரு.கு.மகிழ்ச்சிகரன்
(வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்)

**வடிவமைப்பு**
திருமதி.சசீதா மணிவண்ணன்

**வெளியீடு :- 04.04.2023**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
021 222 2431
Principal@jhc.lk
www.facebook.com/
JaffnaHinducollegeoffcial

## யாழ் இந்துவினால் நடாத்தப்பட்ட துரித இடர்கால மீட்பு நடவடிக்கை

2020 ஏப்ரல் மாதத்திலிருந்து உலகம் முழுவதும் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் இலங்கையிலும் பரவியதைத் தொடர்ந்து நாடு தழுவிய முடக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக பாடசாலைகள் மூடப்பட்டன. நாளாந்த வேலை செய்யும் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் சிரமப்பட்டன. இவ் இடர் சூழ்ந்த வேளையில் கல்வி கற்பதற்கான சூழலை மேம்படுத்த வேண்டின் வறிய மாணவர்களது குடும்பங்களின் அன்றாட உணவிற்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையின் கீழ் யாழ் இந்துக் கல்லூரி உலர் உணவுப் பொதி வழங்கும் செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்து. அத்திட்ட அமுலாக்கலின் விடயங்களின் தொடர்ச்சி வருமாறு,

## இடர்காலத்தில் பாதிப்புற்ற மாணவர்களுக்கான உலர் உணவு வழங்கல்.

♦ 03.04.2020 அன்று எமது கல்லூரி ஆசிரியர்கள், 1989ம் ஆண்டு உயர்தர மாணவர்களான திரு.ச.ஜெயப்பிரகாஸ், திரு.ச.ஹரிகரன் ஆகிய இருவரும், இராசயனவியல் ஆசிரியை செல்வி.கலா நமசிவாயம், (யாழ் இந்து மகளிர் கல்லூரி) திரு.இல.நிஷாந்தன்(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பங்களிப்பில் சேர்ந்த நிதியில், தெரிவு செய்யப்பட்ட 120 மாணவர்களுக்கான உலர் உணவுப்பொதி வழங்கல் செயற்பாட்டின் முதற் கட்டமாக, 50 மாணவர்களுக்கான பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.





♦ 2020.04.04 அன்று யாழ் இந்து சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் COVID-19 துயர் துடைப்பில் இரண்டாம் நாளில் 50 மாணவர்களிற்கான பொதிகள் வழங்கப்பட்டன.

ஆசிரியர்கள், கல்விசாரா அலுவலர்கள், மற்றும் பழைய மாணவர்கள் இதற்கான பணிகளில் ஈடுபட்டனர். ஆசிரியர்கள் தங்களுடைய வகுப்பு மாணவர்களிடம் தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் உரையாடி தகவலை பெற்றனர். அத்தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு மகிழகத்தின் பொறுப்பாசிரியர் திரு.மகிழ்ச்சிகரன் அவர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் தொலைபேசியில் உரையாடி, சமகால நிலைமையை எதிர் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கினார். ஒவ்வொரு பொதிகளும் ஆசிரியர்களினால் மாணவர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று வழங்கப்பட்டது.

அனலைதீவு, நயினாதீவு, காரைநகர், புங்குடுதீவு, வேலணை பிரதேச மாணவர்களுக்கு, பிரதேச செயலகத்திற்கு பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டு அவர்களினூடாக விநியோகிக்கப்பட்டது.

கேகாலை, கண்டி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற வெளிமாவட்ட மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் வங்கி கணக்கிற்கு பணம் வைப்பிலிடப்பட்டது.





♦ 2020.04.06 அன்று யாழ் இந்துக் கல்லூரி சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த COVID-19 துயர் துடைப்பின் தொடர்ச்சியாக எமது அயற் பாடசாலையான வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களிற்கான பொதிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியாக ரூபா 100,000.00 இனை யாழ் இந்து 2002 உயர்தர பிரிவு மாணவர்கள் வழங்கியிருந்தனர். ஒவ்வொரு பொதிகளும் எமது ஆசிரியர்கள் மற்றும் நாவலர் மகா வித்தியாலய ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று வழங்கப்பட்டிருந்தது.









♦ 2020.04.08 அன்று COVID-19 துயர் துடைப்பு பணியின் தொடர்ச்சியாக 25 மாணவர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. எம்முடைய கல்லூரி மாணவர்கள், யாழ் மாவட்டம் முழுவதும் பரந்து காணப்படுவதால் விநயோகப்பணியில் ஈடுபடுதல் மிகுந்த சிரமத்திற்குரியதாக இருந்த போதும் ஆசிரியர்கள் மாலை 6.30 மணிவரை விநியோகப்பணியில் ஈடுபட்டு பொதிகளை வழங்கியிருந்தனர்.

## இணையவழிக் கல்வி நடவடிக்கை

2020 ஏப்ரல் மாதத்திலிருந்து உலகம் முழுவதும் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் இலங்கையிலும் பரவியதைத் தொடர்ந்து நாடு தழுவிய முடக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக பாடசாலைகள் மூடப்பட்டன. கடைகள் பூட்டப்பட்டு எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் மாணவர்கள் வீட்டிலிருந்தே கற்கக் கூடியவாறு இணையவழிக் கற்றல் நடவடிக்கை விருத்தி செய்யப்பட்டது. இதற்காக அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழிநுட்ப வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அனைத்து ஆசிரியர்களும் இப்புதிய கற்பித்தல் முறைமையில் நிபுணத்துவம் பெற்றனர். இதன் மூலம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்படாது பாதுகாக்கப்பட்டு முன்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

♦ 2020.04.07 தொடக்கம் இணைய வழி கற்கையினை மாணவர்கள் எமது கல்லூரி இணையத்தளத்தினூடக மேற்கொள்ள முடிந்தது. இதன் போது உயர் தரப்பாடங்களுக்கான காணொளிகள் தரவேற்றப்பட்டிருந்தன. வேறு மூலங்களில் பெறப்பட்ட காணொளிகள் மாணவர் கல்வி கற்க இலகுவாக ஒழுங்கமைக்கப்பட்டது. இணையத்தினை பயன்படுத்த வசதியில்லாத மாணவர்களும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையிலான ஒழுங்குகள் எமது ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

♦ 2020.04.08, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் செயற்பாடுகளை அனைவரும் அறிந்து கொள்ளும் முகமாக, புதிய Viber community தொடங்கிவைக்கப்பட்டது. கீழ்வரும் இணைப்பினூடாக அக்குழுமத்தில் இணைந்து கொள்ள முடியும்.

Join Jaffna Hindu College https://invite.viber.com/... on Viber


♦ 2020.04.09 அன்று அனைத்து தமிழ் மாணவர்களும் பயன்பெறக்கூடிய வகையில் எமது கல்லூரியினால் எமது ஆசிரியர்களின் பங்களிப்புடன் மின்வழிக்கற்றல்(e-learning) காணொளிகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.







♦ 2020.04.17 அன்று எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட இரசாயனவியல் பாடத்தின் பண்பறிபகுப்பு (Qualitative Analysis) தரவேற்றம் செய்யப்பட்டது. எமது உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவர்கள் அனைவரும் இணையத்தினை அணுகக் கூடிய நிலையில் இருந்ததனால் அவர்களுக்கான zoom மூலமான online கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் உயர்தர மாணவர்கள் இணைய கற்கைகளை மேற்கொள்வதற்கான இணைய கட்டணங்களை செலுத்துவதில் இடர்பாடுகள் இருப்பின் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உதவியினை பெற்றுகொள்ள முடியும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.




♦ தரம் 6 – 11 ம் தர மாணவர்கள் சிலரால் இணையத்தினை அணுக முடியாத சூழ்நிலை இருந்ததனால் அம் மாணவர்களுக்கு மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

♦ 2020.04.19. அன்று யாழ் இந்துவின் இரண்டாவது காணொளி உயர்தர இரசாயனவியல் பாடத்தின் பண்பறிபகுப்பு பாகம் 3 வெளியிட்டு வைக்கப்பட்டது.




♦ 2020.04.23 அன்று யாழ் இந்துவின் மின் வழிக் கற்கை நிகழ்ச்சி திட்டத்தில் உயர்தர பௌதீகவியல் பாடத்தின் வெப்பவியலில் ஆவிகள் பாகம் 1 வெளியிட்டு வைக்கப்பட்டது.



♦ யாழ் இந்துவின் மின் வழிக் கற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் தொடர்ச்சியாக உயர்தர பொறியியல் தொழில்நுட்ப பாடத்தின் தானியங்கி மோட்டார் வாகன தொழில்நுட்பம் பகுதி 1 வெளியிட்டு வைக்கப்பட்டது.



♦ 2020.04.24 அன்று இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்காக எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட செயலட்டைகளை பின்வரும் இணைப்பினூடாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக வெளியிடப்பட்டது.

http://www.jhc.lk worksheet-jhc/


♦ 2020.05.01 யாழ் இந்து மாணவர்களின் கற்பித்தல் காணொளி உயர்தர இரசாயனவியல் பாடத்தின் வாயுக்கள் (Gases) எனும் பகுதியை உள்ளடக்கியதாகவும், இரசாயன பிணைப்புக்கள் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கியதாகவும் இவ் இரு மாணவர்களும் முன் வைப்புச் செய்திருந்தனர்.








♦ 2020.05.09 யாழ் இந்துவின் மின் வழிக் கற்கை நி-கழ்ச்சி திட்டத்தின் தொடர்ச்சியாக தரம் 11 கணித பாடத்தின் வரி (Tax) எனும் பகுதி ஒளிப்பதிவு செய்யப்பட்டு தரவேற்றப்பட்டது.



♦ 2020.05.11 அன்று யாழ் இந்துவின் மின் வழிக் கற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் தொடர்ச்சியில் உயர்தர பொறியியல் தொழில்நுட்ப பாடத்தின் Automobile Part II- (தானியங்கி மோட்டார் வாகன தொழில்நுட்பம்– பகுதி 2) ஒளிப்பதிவு செய்து தரவேற்றப்பட்டது.





♦ 2020.05.16 அன்று யாழ் இந்துவின் மின் வழிக் கற்கை நிகழ்ச்சி திட்டத்தின் தொடர்ச்சியாக உயர்தர இரசாயனவியல் பாடத்தின் இரசாயனச் சமநிலை




பாகம்1 (Chemical Equilibrium part I) ஒளிப்பதிவு செய்து தரவேற்றம் செய்யப்பட்டது.

♦ 2020.05.20 யாழ் இந்துவின் மின் வழிக் கற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் தொடரச்சியாக உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பாடத்தின் அறுவடைக்கு பிந்திய நுட்ப முறைகள் பகுதி (Post harvest Technology) ஒளிப்பதிவு செய்யப்பட்டு தரவேற்றம் செய்யப்பட்டது.




♦ 2020.05.30 அன்று யாழ் இந்துவின் மின்வழிக் கற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியாக அனைத்து தமிழ் மாணவர்களும் பயன்பெறும் வகையில் தரம் 11 கணித பாடத்தின் வரைபு எனும் பகுதியினை ஒளிப்பதிவு செய்து எமது YouTube தளத்தில் பதிவிடப்பட்டது.





♦ 2020.06.02 அன்று எமது பாடசாலை தவிர்ந்த வேறு பாடசாலை உயர்தர மாணவர்களும் இலவசமான இணைய பாவனையுடன் எமது பாடசாலையின் நிகழ் நிலை (Online) வகுப்புக்களில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. வகுப்புக்களுக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டது. அதற்கான இணைப்புக்கள் எமது பாடசாலையின் viber குழுமத்தில் வகுப்பு ஆரம்பிக்கும் நேரத்தில் பதிவிடப்பட்டது.
https://invite.viber.com/...

♦ 2020.06.14 அன்று யாழ் இந்துவின் மின் வழிக் கற்கை நிகழ்ச்சி திட்டத்தின் தொடர்ச்சியாக உயிரியல் மீளசேர்க்கைக்குரிய DNA தொழில்நுட்பம்(DNA Replication) எனும் பகுதி ஒளிப்பதிவு செய்யப்பட்டு தரவேற்றம் செய்யப்பட்டது.




♦ 2020.06.18 அன்று யாழ் இந்துவின் மின் வழிக் கற்கை நிகழ்ச்சி திட்டத்தின் தொடர்ச்சியாக உயர்தர இணைந்த கணித பாடத்தின் மட்டுச் சமநிலைகள் (Modulus) எனும் பகுதி ஒளிப்பதிவு




**இடருற்ற ஏனைய பாடசாலைகளுக்கான யாழ் இந்துவின் உதவித் திட்டம்.**

♦ 2020.05.05 அன்று தீவக கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 30 பாடசாலைகளை சேர்ந்த 650 மாணவர்களுக்கு யாழ் இந்துக் கல்லூரி சமூகத்தினால் தமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட 6 பாடங்களுக்கான செயலட்டைகளின் வன் பிரதிகள் மற்றும் மாணவர்கள் பயிற்சிகளை மேற்கொள்ள 650 CR கொப்பிகளும் தீவக வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன. ஒவ்வொரு பாடசாலையிலும் செயலட்டைகளை சிறப்பாக பூர்த்தி செய்த ஓர் மாணவன் / மாணவி தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டது. இதற்காக ரூபா 100,000.00 இனை அனுசரணையாக யாழ் இந்து 2002 உயர்தர பிரிவு மாணவர்கள் வழங்கியிருந்தனர்.





**இடர்காலத்தில் பாதிப்புற்ற மாணவர்களுக்கான உலர் உணவு வழங்கல் – கட்டம் II**

♦ 2020.05.06 மற்றும் 2020.05.07ம் திகதிகளில், கொரோனா இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு, இரண்டாம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கல் நடவடிக்கைக்காக யாழ் இந்துக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கம் ரூபா 373,000.00 இனை யாழ் இந்து 1991ம் ஆண்டு உயர்தர பிரிவு ரூபா 100,000.00 இனையும் வழங்கியிருந்தனர். தெரிவு செய்யப்பட்ட 200 மாணவர்களில் முதற் கட்டமாக எமது ஆசிரியர்களினால் 69 மாணவர்களிற்கான உணவுப்பொதிகள் அவர்களது வீடுகளுக்கு சென்று வழங்கப்பட்டது. மாணவர்களுக்கான செயலட்டைகளின் வன்பிரதிகளும் வழங்கப்பட்டன.





♦ 2020.05. 08,09ம் திகதிகளில் கொரோனா இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருட்கள் வழங்கல் நடவடிக்கையின் தொடர்ச்சியாக 91 மாணவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



## விளையாட்டு மைதானம் புனரமைத்தல்

♦2020.05.23 அன்று பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் "திடல்" மைதான புனரமைப்பு திட்டம் இறுதிக்கட்டத்தினை நெருங்கியது. நவீன வசதிகளுடன் கூடிய தரம் வாய்ந்த விளையாட்டு மைதானமாக யாழ் இந்துவின் விளையாட்டு மைதானம் மாறி வருகின்றது.








## யாழ் இந்துக் கல்லூரியின் YouTube தளம்

♦ 2020.05.24 அன்று யாழ் இந்துக் கல்லூரியின் YouTube தளத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 28 நாட்களில் ஐம்பதினாயிரத்தைத் தாண்டியது. அனைத்துத் தமிழ் மாணவர்களும் பயன் பெறும் வகையில் எமது ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவுக் கற்பித்தல் காணொளிகள் யாழ் இந்துக்கல்லூரி YouTube தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தன.




https://www.youtube.com/.../UC3HQ2vAbBq-50gQJk0bue1g/videos

## மாணவர்களுக்கு வரைபட்டிகள் வழங்கல் (Tablets)


♦ 2020.05.25 அன்று எமது பாடசாலையின் வேண்டுகோளிற்கிணங்க பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினால் ரூபா 1.2 மில்லியன் வரைபட்டிகை திட்டத்திற்காக வழங்கப்பட்டது. அதன்மூலம் 49 வரைபட்டிகைகள் பாடசாலைக்காக கொள்வனவு செய்யப்பட்டது. இவை கற்றல் நடவடிக்கைக்கு மட்டும் பயன்படுத்தக் கூடிய பாதுகாப்பு அம்சங்களுடன் கற்றல் காணொளிகள், செயலட்டைகள் மற்றும் மின் நூல்கள் என்பன பதிவேற்றப்பட்டு பொருளாதார நிலையில் பின் தங்கிய உயர்தர மற்றும் சாதரண தர மாணவர்களுக்கு இரவலாக வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் எமது பாடசாலையினால் செயற்படுத்தப்படும் நிகழ்நிலை (Online classes) வகுப்புக்களில் 100% மாணவர்கள் கலந்து கொள்வது உறுதிப்படுத்தப்பட்டது.



## நிகழ்நிலையில் பரீட்சைகள் (Online Exams)

♦ 2020.05.31 தொடக்கம் மாணவர்கள் எமது பாடசாலையின் நிகழ்நிலை பரீட்சைகளில் பின்வரும் இணைப்பினூடாக பங்கேற்கக் கூடியவாறான செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டன.

http://www.jhc.lk/e-learning-online-exams/




## ஞானவைரவர் கோயில் சங்காபிஷேகம்

♦ 2020.06.10 அன்று எமது கல்லூரியின் சிவஞானவைரவர் கோயில் சங்காபிஷேகம் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.










## இடர்காலத்தில் பாதிப்புற்ற மாணவர்களுக்கான உலர் உணவு வழங்கல் – கட்டம் III

♦ 2020.06.20 யாழ் இந்துவின் மூன்றாம் கட்ட இடர் நிவர்த்திப் பணி, எமது மாணவர்கள் வறுமை மற்றும் இயலாமை காரணமாக கல்வியில் பின்தங்கிவிடக்கூடாது. அவர்களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் முதலில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு எமது கல்லூரி ஆசிரியர்களினால் 200 மாணவர்கள் இனங்காணப்பட்டு. ஊரடங்கு வேளையிலும் இரண்டு கட்டங்களாக இவர்களுக்கான உணவுப் பொதிகள் அவர்களின் வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு தானிய வகை, போசாக்கு உணவு மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக பிரித்தானியா பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையோடு 12.06.2020ம் திகதி தொடங்கி மொத்தமாக 200 மாணவர்களுக்கு தானிய வகை, போசாக்கு உணவு மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.





## இடர்காலத்தில் மாணவர்களுக்கான செயலட்டைகள் வழங்கல்.

♦ 2020.06.13 அன்று எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட இரண்டாம் தவணை பாடப்பரப்புக்களை தழுவிய 152 செயலட்டைகளை யாழ் இந்து இணையத்தளத்தினூடாக தரவிறக்கி கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. பூர்த்தி செய்த முதலாவது செயலட்டைகளை பாடசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும் அவை எமது ஆசிரியர்களினால் பரீட்சிக்கப்பட்டு மீள பாடசாலை ஆரம்பிக்கும் போது மாணவர்களிடம் வழங்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 04.04.2023ல் வெளியிடப்பட்டது

## Contribution - Work

| No | Date | Donors details | Work | Place | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | 22.06.2020 | S.Jeyapiragash (JHC-89-UK), A.Agilan (JHC-90-UK) | Painting, Seat covers & curtains for school bus | | 450,000.00 |

## Donation - Things

| No | Date | Donors details | Donated Items | No of Items | Place | Amount | Donation Receipt No | Master Inventory | Inventory folio No |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 25.05.2020 | Colombo OBA | 96" Smart Board | 6 | For Grade 9 Class-rooms | 1,605,000.00 | 4664 | Vol II P 27 | Book 15 Page 69 |
| 2 | 29.06.2020 | U.K OBA | Tab | 49 | School (ICT Lab) | | 4666 | Vol III P 58 | Book 14 Page 26 |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 04.04.2023ல் வெளியிடப்பட்டது